# ஜீலை 15 - புனித பொனவெந்தூர் (1221-1274)

இவரது ஞானஸ்நானப் பெயர் ஜாண். குழந்தைப்பருவத்தில் இவருக்கு ஒரு நோய் வந்தது. புனித அசிசி பிரான்சிஸ் இவரை புதுமையாக குணப்படுத்தினார். இவரால் ஏராளமான நன்மைகள் வரும் என்று புனித பிரான்சிஸ் முன்னறிவித்தார். "பேனா" என்றால் நன்மைகள் "வெந்தூரா" என்றால் வர இருக்கினறன. எனவே பொனவெந்தூர் என்ற பெயர் இவருக்கு வழங்கலாயிற்று. 22-ஆம் வயதில் இவர் பிரான்சிஸ்கன் சபையில் சேர்ந்து, பாரிஸ் நகரில் இரண்டு சிறந்த ஆசிரியர்களிடம் கல்வி பயின்றார். புனித தாமஸ் அக்குயினாஸ் இவருடைய உற்ற நண்பர். இவரும் புனித தாமசும் அறிஞர் பட்டம்பெறும் நாள் வந்தது. இருவருமே தாழ்ச்சி நிறைந்தவர்கள். இந்தப் பட்டத்தை தாமஸ் முதலில் பெற வேண்டும் என்று இவர் வற்புறுத்தினார். தாழ்ச்சி மிகுந்த தாமஸ் மறுக்கமுடியாமல் இவரது விருப்பத்திற்கு இணங்கினார். இவர் பிரான்சிஸ்கு சபையின் தலைவரானார். இவரது முயற்சியால் சபையில் அமைதி ஏற்பட்டது. இவர் புனித அசிசி பிரான்சிஸ்சின் வாழ்க்கை வரலாற்றை எழுதிக் கொண்டிருந்தார். அப்போது புனித அக்குயினாஸ் தாமஸ், இவரைப் பார்க்க வந்தார். ஒரு "புனிதர் இன்னொரு புனிதரது வாழ்க்கை வரலாற்றை எழுதிக்கொண்டிருக்கிறார்" என்று தாமஸ் கூறி அகன்றார். பாப்பானவர் இவரை கர்தினால் ஆக்க தீர்மானித்து, பதவிக்குரிய தொப்பியை தம்முடைய பிரதிநிதிகள் வழியாக அனுப்பினார். பிரதிநிதிகள் மடத்துக்குச் சென்ற எங்கும் இவரைத் தேடினார்கள். இவர் அகப்படவில்லை இறுதியாக இவரை சமையல் அறையில் கண்டார்கள். உணவுத் தட்டுகளை இவர் கழுவிக் கொண்டிருந்தார். பிரதிநிதிகள் திகைத்தார்கள். நம் புனிதரோ அமைதியாக அவர்களை நோக்கி, "தொப்பியை தயவு செய்து அந்த மரத்தில் தொங்கவிட்டுச் செல்லுங்கள்" என்றார். சாகுமுன் தம் பதவியை விட்டு விலகினார். 1274-ஆண் ஆண்டில் 2-வது லையன்ஸ் நகர்ச் சங்கம் நடக்கும்போது இவர் இறந்தார்.




**சிந்தனை:** "பெரிய காரியங்களைச் செயவதில் அல்ல, ஆனால் சாதாரண காரியங்களை சிறந்த விதமாக செய்வதில் உத்தமதனம் அடங்கியிருக்கிறது" (புனித பொனவேந்தூர்)

**செபம்:** ஆண்டவரே, எனக்கும் நான் நேசிக்கிறவர்களுக்கும், என்னைச் சார்ந்தவர்களுக்கும் தாழ்ச்சி என்னும் வரத்தைத் தாரும்.